Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.267/2015

**Depositions of PW- 5**

| Name | திரு.ஈஸ்வரன் | Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
|---|---|---|---|
| Father's name | ராசு | Calling | |
| Village | கரிவலம்வந்தநல்லூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of February 2026.

16.02.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது கரிவலம் வந்த நல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐ தெரியும். எதிரிகளை தெரியாது. கடந்த 2013 ம் வருடம் ஒரு நாள் எங்கள் நிறுவனத்திற்கு சொன்தமான கம்ப்யூட்டர், பிரின்டர் ஆகிய பொருட்கள் திருடுபோனதாக எனக்கு செல்போன் மூலம் மேலாளர் சுப்பையா தெரிவித்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 13.04.2013 ம் தேதி எப்போதும்போல் வேலை முடித்துவிட்டு ஊருக்கு சென்றுவிட்டேன் என்றும் மறுநாள் தமிழ்புத்தாண்டு என்பதால் வீட்டிலிருந்தபோது சூப்பர் வைசர் முரளி என்பவர் செல்போன் மூலம் தொடர்பு கொண்டு எங்கள் அலுவலகத்தில் மேலாளர் அறை அருகே உள்ள கேபின் மேசையிலிருந்து ஆப்பிள் கம்ப்யூட்டர், அக்கவுண்ட் செக்னில் இருந்த Dell computer and Invertor –1, Canon Fax

Machine –1, MD அறையிலிருந்து ஆப்பிள் கம்ப்யூட்டட்ர், குடோனிலிருந்த பிரின்டர், ஆகிய பொருட்கள் திருடுபோனதாக கூறினார் என்று போலீசா விசாரணையில்கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.267/2015

**Depositions of PW- 6**

| Name | **திரு.சத்யராஜ்** | Occupation | ஓட்டுநர் |
|---|---|---|---|
| Father's name | ஜெகதீஸ்வரன் | Calling | |
| Village | ராஜபாளையம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of February 2026.

16.02.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2013ம் வருடம் ஸ்ரீராம் மெடி டெக்ஸ் நிறுவனத்தில் Lab Technician ஆக வேலை செய்தேன். கடந்த 14.04.2013 ம் தேதி நான் தமிழ் புத்தாண்டிற்காக வீட்டிலிருந்தபோது எங்கள் நிறுவன மேலாளர் முரளி என்பவர் எனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமான கணினி, இன்வெர்ட்டர், பிரின்டர் ஆகிய பொருட்கள் களவு போனதாக கூறினார். நான் உடனே கிளம்பி நிறுவனத்திற்கு சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.